## உடபலாத்த பிரதேச சபை
## கண்டி மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை உடபலாத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 19,000 ஆன முத்திரைக் கட்டணங்கள், பெற வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்தமையால் அப்பெறுமதியால் ஆண்டின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு எனினும், வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த ரூபா 440,031 பெறுமதியான 03 நிர்மாணங்கள் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 167,223 பெறுமதியான 05 உபகரண ஒருப்படிகளின் பெறுமதி ரூபா 113,157 என கணக்கீடு செய்தமையால் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீதி ரூபா 54,066 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 யூலை 20 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 29,600 பெறுமதியான 08 கணனி உபகரண உருப்படிகளின் (UPS) பெறுமதி ரூபா 79,042 ஆன கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ரூபா 49,442 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 201,600 தொகையான முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் கிடைக்க வேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2 கணக்கு விடயங்களின் மீதி பயன்பாட்டு பட்டோலைகள் மீதியுடன் ஒப்பிட்ட போது ரூபா 99,961,730 தொகையான இணக்கமின்மை கண்டறியப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் 09 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 51,714,375 தொகையானதுடன் அதில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,619,789 ஆக காணப்பட்டது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,917,322 கூட்டுப்பெறுமதியான தொகையானதுடன் அதில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 956,810 ஆக காணப்பட்டது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 933,968 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும்இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | **பெறுமதி** | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| (i) 59 | - | மீளாய்ாவண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய வியாபாரம் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| xix அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | - | ஓய்வு பெறும் போது அரசின் வீடுகளின் உரித்து கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படாத மூன்று ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>571(3) | 757,214 | 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 16 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் தொகை மற்றும் நானாவித வைப்பு தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | திறைசேரிச் சுற்றறிக்கை<br>2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2,827,662 | கணனி, உப பாகங்கள் என்பவற்றை பதிவுசெய்வதற்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 67,801,354 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,525,414 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| 2017 | 2016 |
|---|---|

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,534,000 | 1,969,320 | 2,009,921 | 4,414,656 | 2,734,000 | 2,043,724 | 2,074,789 | 4,455,257 |
| (ii) | வாடகை | 2,935,000 | 1,986,504 | 1,929,696 | 774,983 | 1,990,000 | 1,946,581 | 1,913,012 | 718,175 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,000,150 | 1,629,090 | 1,629,090 | -- | 1,800,150 | 1,850,248 | 1,850,248 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 27,400,000 | 60,325,325 | 41,098,472 | 41,784,343 | 25,050,000 | 36,898,464 | 39,505,348 | 23,412,155 |
| | மொத்தம் | 35,869,150 | 65,910,239 | 46,667,179 | 46,973,982 | 31,574,150 | 42,739,017 | 45,343,397 | 28,585,587 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 28,585,587 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 46,973,982 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 64 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் ஆதன வரிகளும்

(i) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,205,112 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் பட்டியலிடல் ரூபா 1,394,500 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் திறைசேரி 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 700,991 மற்றும் ரூபா 874,722 தொகைகள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது சதவீதமாக 32 மற்றும் 63 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 2,023,898 ஆக இருந்ததால் வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,855,218 ஆன மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 08 ஆண்டுகளாக 4 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிய ரூபா 71,157 பெறுமதியான மீதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 52,237 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வீதவரி கொடுப்பனவினை தவிர்ப்பு செய்திருந்த நபர்களிடமிருந்து ரூபா 1,377,157 தொகையொன்று சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) காணி வரி

05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 09 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 24,048 ஆன காணி வரி மீதியொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நீர்க் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ந் திகதி வரையிலும் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 2,191,131 ஆக இருந்ததுடன் இந்நீர்க்கட்டண நிலுவையில் தல்பிட்டிய பிரதேசத்தினதும் தொழுவ பிரதேசத்திலும் செயலற்றுக் நீர் மூலங்களிலிருந்து காணப்படும் நீர் பிரதேசங்களுக்குரிய ரூபா 837,868 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 240 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 2005 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 82,145 ஆன நீர்க்கட்டண நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கடை கூலி**

**(அ) வீட்டு வாடகை**

10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 06 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,757 ஆன வீட்டு வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கடை அறைகளுக்கான வாடகை**

சபைக்குரிய புஸ்ஸல்லாவ உப அலுவலக பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 386,658 ஆன கடை வாடகை மீதியொன்றும் தொழுவ சந்தை மற்றும் வாரச் சந்தைகளின் 06 கடைகளிலிருந்து ரூபா 37,657 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,513,745 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,270,598 தொகை அறவிடவேண்டியதாக காணப்பட்டது. இம்மீதிகளிலிருந்து 2018 மே 15 ஆந் திகதி வரை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 82,783 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,251,598 தொகை மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**(அ) நோக்கத்திற்கு செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

உள்ளூராட்சி மன்றங்கள் பொது சுகாதாரம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் சபை நிதியத்திலிருந்து பொது சுகாதாரத்திற்குரிய 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 682,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது 5 சதவீதமான பெறுமதியை எடுத்திருந்தது. அதன் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூட முறைமைகள் இரண்டும் அலுவலக ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டவையாக இருந்தன.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளாமை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதிஏற்பாடு அந்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 340,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 05 விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 480,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மீளாய்வாண்டில் சபை அபிவிருத்தி நிதியத்தின் கீழ் அபிவிருத்தி முன்மொழிவுகளை நிறைவேற்றும் போது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்து 02 மாதங்கள் மற்றும் 05 மாதங்களுக்கு இடையிலான காலதாமதத்தின் பின்னர் 16 நிர்மாண வேலைகளின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

வேறாக்கப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருட்களில் நாளொன்றுக்கு 02 தொன் அளவில் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி உர உற்பத்திகள் செய்வதற்கோ அல்லது சுற்றாடலுக்கு சாதகமான வெளியேற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

நாளாந்தம் சேரும் கழிவுகள் எவ்வித முகாமைத்துவமொன்றில்லாமல் புஸ்லல்லாவ நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரதேச சபைக்குரிய நகர சபை மண்டப வளவில் குழியொன்றில் கொட்டப்படுவதால் நகரிற்கு வரும் மக்களுக்கு அதிகளவிலான சுகாதார சிக்கல்களுக்கு முகங்கொடுக்கும் நிலைமை மற்றும் ஹொட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்கு சுகாதார சிக்கல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டன. மேலும், அதற்கு அண்மையில் ஆரம்பமாகும் நீர் நிலைகளில் மழை காலங்களில் கழிவுப்பொருட்கள் கலக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

**(ஊ) நான்கு ஆண்டு திட்டம்**

2017 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலப்பகுதிக்குரிய மூலதன செலவினங்கள் தொடர்பான தயாரிக்கப்பட்டிருந்த நான்கு ஆண்டு திட்டத்தினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் அதற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கும் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கின்ற நாட்கள் நலனாளிகளின் எண்ணிக்கை, மேற்பார்வை உத்தியோகத்தர்களின் விபரங்கள் போன்ற விடயங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) **சுற்றாடல் திட்டம்**

மீளாய்வாண்டிற்குரிய சுற்றாடல் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த திட்டத்தின் மூலம் 19 நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் எந்த திகதிகளில் எந்தப் பிரதேச சமூகங்களுக்காக நிறைவேற்றப்பட்டது என்பது தொடர்பான விரிவாக தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

முன்னைய காலப்பகுதியில் புஸல்லாவ நகர மண்டபத்தை வாடகை வழங்கியதால் சபைக்கு கருத்திற் கொள்ளப்பட்ட வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நகர மண்டபம் ஊடாக அடிப்படையிலோ அல்லது பொதுமக்கள் தேவைக்காக வழங்காமல் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தி காரணத்தினால் வருமானம் உழைப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) ஓய்வுபெற்ற , வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் மரணித்த 10 ஊழியர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் ரூபா 127,271 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) 2016 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஓய்வுபெற்றுள்ள 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 347,406 பெறுமதியான கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு 2018 மே 02 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) வியாபார அனுமதிப்பத்திரம், சுற்றால் அனுமதிப்பத்திரம், முச்சக்கர வண்டி நிறுத்தல் கட்டணங்கள் மற்றும் அறிவித்தல் பதாகைகள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பதிவேடுகளில் உள்ளடக்கி அதற்கு ஒப்பாக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கணிப்பீடொன்றை மேற்கொள்ளல் அல்லது பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமல் கட்டணங்கள் அறவிடும் சந்தர்ப்பங்களில் பதிவேடுகளுக்கு உட்படுத்தும் முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரட்டைப் பாதை பொது வர்த்தக சந்தைக்கு அருகில் 03 பேர்ச் காணி உடன்படிக்கை செய்யப்படாமல் குத்தகைக்கு வழங்கிய காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 110,600 நிலுவை மீதியை அறவிட முடியாமல் இருந்தது.

(இ) 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய மதிப்பீடொன்று மேற்கொண்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2005 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் பழைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டிற்கு வீதவரி பட்டியலிடப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தல்

(அ) சபையினால் ரூபா 7,205,839 பெறுமதியான 08 வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 விளைவற்ற/ குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

(அ) ரூபா 6,009,602 பெறுமதியான டம்ப் டிரக் வண்டியை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 102,990 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத கெப் வண்டி என்பன 02 இற்கும் 24 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) புஸ்ஸல்லாவ நகர மத்தியில் அமைந்துள்ள நகர சபைக் கட்டிடம் எவ்வித பராமரிப்பும் இல்லாமல் உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 3.6 பெறுகை

#### ஒப்பந்த நிர்வாகம்

(அ) புஸ்ஸல்லாவ நகரில் உக்காத பொருட்களை சேகரிக்கும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,485,778 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு 2017 நவம்பர் 29 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,338,088 ஆன பகுதிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முதலாவது வகுப்பின் 100 மி.மீ x 50 பராலைகள் மற்றும்முதலாம் தர 50 மி.மீ x 50 மரப் பலகை இடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கூரைக்காக இடப்பட்டிருந்த அநேகமான பலகைகள் பழுதடைந்த பொருத்தமற்றதாக இருந்தன.

(ii) சுவரின் சாந்து பூசுதல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iii) சுவர்களுக்குரிய பூச்சு பூசுதல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) கதவு மூடிகளின் எனாமல் பூச்சு பூசுதல் இரண்டு முறை பூசுவதற்கு மதிப்பீடு செய்து ஒரு முறை மாத்திரம் பூசியிருந்த போதிலும் அது முறைப்படி இடம்பெற்றிருக்கவில்லை.

(v) சீமெந்து மற்றும் மணல் கலவையில் கட்டிடத்தின் உள்ளே நிலம் சாந்துபூசப்பட வேண்டிய போதிலும் அதனை உடைத்து பரீட்சித்த

போது இலகுவில் உடையக் கூடிய மட்டத்தில் பலவீனமாக கலவையொன்று இடப்பட்டிருந்தது.

(ஆ) புஸ்ஸல்லாவ பொது வியாபார கட்டிடத்தை சுற்றி கற்களை பரப்புவதற்காக ரூபா 1,857,969 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 2017 யூலை 24 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 1,645,969 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்ணயிக்கப்பட்ட அளவிலும் நிர்ணயிக்கப்பட்ட தரத்திலும் கற்களை தேடிக் கொள்வதற்கு சிரமம் எனக் குறிப்பிட்டு இரண்டு சந்தர்ப்பங்களின் போது காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை சந்தர்ப்பத்தில் பரப்பப்பட்டிருந்த சிவப்பு நிற இணை கொங்கிரீட் கற்களின் மேலேயுள்ள நிறம் கழுவிச் செல்லப்பட்டு நிறம் மாறி கற்கள் உடைந்திருந்தமையால் உரிய தரத்தில் பரப்பியிருக்கவில்லை.

(ii) கொங்கிரீட் கற்கள் இட்டு பாதுகாப்பு சுவர் இடைத்தொடர்பு கற்களை விட 1 அங்குலம் அளவில் கீழாக இருந்ததுடன் அக்குறையை நிரப்புவதற்கு 1 அங்குலம் அளவில் சார்ந்து தளமொன்று இடப்பட்டிருந்தது. அவ்வாறு இடப்பட்டிருந்த சாந்து தளம் நியம தரத்திற்கு இடப்படாமையால் அநேகமான இடங்களில் உடைந்திருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே 04 வருமான விடயங்களில் 26 சதவீதம் முதல் 291 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 33 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்கு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குப் புறம்பான வேறு கடமைகள் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிருவாகம் | i. நிலுவை வருமான அறவீடு பலவீனமான மட்டத்தில் காணப்படல்<br>ii. உடன்படிக்கை கைச்சாத்திடாமல் குத்தகைக்கு ஆதனங்களை வழங்குதல் |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | i நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை<br>ii. விளைவற்ற மற்றும் குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள் காணப்பட்டமை<br>iii சொத்துக்களின் உரித்தினை கையேற்பதில் பலவீனங்கள் காணப்பட்டமை |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i நீண்டகால கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்வு செய்யப்படாமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | i மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு செலவிடப்படாமை<br>ii. மதிப்பிடப்பட்ட வருமானம் அறவீடு செய்யப்படாமை. |